National Cadet Corps.

* 227. Q.—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state:

(a) whether the Tamil Nadu Government have proposed to award prizes to outstanding N.C.C. cadets in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) புது டில்லியில் குடியரசு நாளன்று ஆண்டுதோறும் நடைபெறும் தேசிய மாணவர் படை அணிவகுப்பிலும், தனிப் போட்டி நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டு தம் திறமையால் பரிசு பெறும் இம்மாநிலத்தைச் சார்ந்த தேசிய மாணவர் படையினருள் தலை சிறந்தவருக்கும் இரண்டாவதாக வருபவருக்கும் பரிசு அளித்திட திட்டம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

முதல் தகுதி பெறுபவருக்கு ரூ. 100 மதிப்புள்ள பரிசும் ரூ. 200-க்கு சேமிப்புப்பரிசுப் பத்திரமும் வழங்கப்பெறும். இரண்டாமவருக்கு ரூ. 100 மதிப்புள்ள பரிசும், ரூ. 100 மதிப்புள்ள சேமிப்பு பரிசுப்பத்திரமும் வழங்கப்பெறும்.

பல்வேறு நிகழ்ச்சிகளில் பல்வேறு மாநிலகுழுக்களிடையே நிகழும் போட்டிகளில் வெற்றிபெறும் தமிழ்நாடு தேசிய மாணவர் படைக் குழுக்களுக்கு சுழல் கோப்பைகள் பரிசளிக்கப்படும். ஆண்டுதோறும் இப்பரிசுகள் அரசு விழா ஒன்றில் வழங்கப் பெறும்.

திரு. என். கே. பழனிசாமி: சார், இந்தப் போட்டிகளில் சமீபத்தில் ஆர்ச்சரி—வில் விடுவது—போன்ற முறைகளை இன்ட்ரடியூஸ் செய்ய ஏதாவது உத்தேசம் இருக்கிறதா? அப்படியானால் அதன் விவரம் என்ன என்று அமைச்சரவர்கள் சொல்வார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்புகள் என்னிடம் இல்லை. ஆனால், தேசிய மாணவர் படையைப் பொறுத்தவரையிலும் என்னென்ன பயிற்சிகள் தரப்பட வேண்டுமென்று அகில இந்திய அளவிலே இராணுவத்தினர்தான் முடிவு செய்கிறார்கள். அவர்கள்

1975 நவம்பர் 7]

அளிக்கின்ற பாடத் திட்டங்களும், அவர்கள் அளிக்கின்ற பயிற்சி முறைகளும்தான் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த ஆர்ச்சரி முறை இருக்கிறதா இல்லையா என்பது தெரியவில்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் அறிந்து சொல்லலாம்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதிலின்போது சொன்ன தேசிய மாணவர் படையைச் சேர்ந்த தலைசிறந்த மாணவருக்கு அளிக்கப்படும் பரிசுத் தொகை குறைவாக இருக்கிறது. இந்த மாதிரி பணப் பரிசு தருவதை விட, இதிலே சிறந்து விளங்கக்கூடிய மாணவர்களுக்கு அவர்களுடைய கல்வி முடியும் வரையிலே இலவச ஸ்காலர்ஷிப் போன்றவைகள் தருவதோடு, இராணுவ விஞ்ஞானம் (மிலிட்டரி சையன்ஸ்) போன்ற பாடத்திட்டங்களைப் புகுத்தி, அதிலே அவர்களுக்குத் திறமையாகப் பயிற்சி அளித்து, இந்த நாட்டின் நல்ல பாதுகாவலர்களாக அவர்களை ஆக்குவதற்கு உண்டான வழியை அரசு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, கல்வி பெறுவதற்கு வேறு பல வகைகளிலே, உதவிச் சம்பளம், உதவித் தொகை ஆகியவற்றைப் பெற்று வருகிறார்கள். ஆனால், என். சி. சி.-யிலே பயிற்சி பெற்று பிற்காலத்திலே இராணுவப் பயிற்சி பெறுவதற்கும், இராணுவப் பள்ளியிலே சேருவதற்கும் சிறந்த வாய்ப்புகளிருக்கின்றன. அந்த முறையிலேதான் மாணவர்களுக்கு என்.சி.சி. பயிற்சி அளிக்கப்படுகிறது. நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளத்தக்க அளவுக்கு கடந்த 4 ஆண்டுகாலமாக தொடர்ந்து All India Banner- ஐ தமிழ்நாட்டு தேசிய மாணவர் படைதான் பெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த ஆண்டும் பெற்றிருக்கிறது. மாணவர்களுக்கு டெல்லி அரசாங்கத்தின் சார்பாக குடியரசு நாளன்று அந்தப் பரிசுகளையெல்லாம் வழங்குகிறார்கள். தொடர்ந்து மாணவர்கள் பரிசு பெற்றிருக்கிறார்கள். நம்முடைய மாநில அரசு எதுவும் செய்யாமலிருக்கிறது என்பதற்காக, இந்த ஆண்டு ரூ. 3,000 ஒதுக்கி, பரிசுகள் வழங்குகின்ற தன்மையையும், அவர்களை ஊக்குவிக்கிற தன்மையையும் மேற்கொண்டிருக்கிறோம்.